<u>மகளிர் நீதிமன்றம், கோயமுத்தூர்</u>

**முன்னிலை - திருமதி.ஜெ. ராதிகா.எம்.ஏ., எம்.எல்,**
**அமர்வு நீதிபதி,**
**மகளிர் நீதிமன்றம்,**
**கோயமுத்தூர்.**

<u>2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ம் நாள் புதன்கிழமை</u>

<u>அமர்வு வழக்கு எண்.124/2018</u>

**(பி.14 குனியமுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.627/2015)**

---

(காருண்யா நகர் காவல் நிலைய குற்ற எண்.627/2015, என்ற வழக்கு கோயமுத்தூர் கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மு.நி.ப.வ.எண்.01/2018-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, committal உத்தரவிடப்பட்டு, கோயமுத்தூர், மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டு, அ.வ.எண்.124/2018-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர்,<br>பி.14 அனைத்து மகளிர் காவல் நிலையம்<br>(சட்டம் மற்றும் ஒழுங்கு),<br>குனியமுத்தூர், கோவை மாநகர். |
| 2. | எதிரி பெயர் | : | 1) ராஜேஷ் (வயது-35),<br>த/பெ.செல்லமுத்து, எம் 200,<br>முத்துப்பாளையம் ஹவுசிங் யூனிட்-1,<br>ரங்கம்பாளையம், அந்தியூர், ஈரோடு.<br><br>2) சுந்தரி (வயது-58),<br>க/பெ.செல்லமுத்து, எம் 200,<br>முத்துப்பாளையம் ஹவுசிங் யூனிட்-1,<br>ரங்கம்பாளையம், அந்தியூர், ஈரோடு.<br><br>3) செல்லமுத்து (வது-72/2018) (இறந்து விட்டார்.)<br>த/பெ.மாறன், எம் 200,<br>முத்துப்பாளையம் ஹவுசிங் யூனிட்-1,<br>ரங்கம்பாளையம், அந்தியூர், ஈரோடு. |
| 3. | குற்றச்சாட்டுக்கள் | : | எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 498(A), 315, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 4. | எதிரியின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை. |

| | | | |
|---|---|---|---|
| 5. | தீர்ப்பு | : | **முடிவில்,** முதல் எதிரி மீதான இ.த.ச. 498(A), 315, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டும், 2-ம் எதிரி மீதான இ.த.ச. 498(A)-ன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் 1, 2 எதிரிகள் மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்வு கண்டு, முதல் எதிரி இ.த.ச. 498(A), 315, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழும், 2-ம் எதிரி இ.த.ச. 498(A)-ன் கீழும் குற்றவாளி அல்ல என தீர்வு கண்டு, 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது. இவ்வழக்கில் 3-வது எதிரி இறந்துவிட்டபடியால், அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப் போய் விட்டது.<br>இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் இல்லை. |

இந்த வழக்கானது 29.01.2020 இன்று என் முன் விசாரணைக்காக வந்ததில், அரசு தரப்பில் திருமதி. ஆர்.சரோஜினி, பி.ஏ.,பி.எல்., சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.கலையரசன் அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:**

இவ்வழக்கில் வாதி ஜூலி 1-ம் எதிரியின் மனைவி என்றும், 2-ம் எதிரி 1-ம் எதிரியின் தாயார் மற்றும் இறந்து போன 3-ம் எதிரி 1-ம் எதிரியின் தந்தை என்றும், 1-ம் எதிரிக்கும், வாதிக்கும் 10.11.2014-ம் தேதி பெரியோர்கள் முன்னிலையில் கோவைபுதூரில் உள்ள சி.எஸ்.ஐ. சர்ச்சில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் போது வாதியின் பெற்றோர் 68 பவுன் நகையும், 1-ம் எதிரியாகிய உமக்கு 7 பவுன் நகையும் ரொக்கமாக ரூ.4,00,000/-மும் சீதனமாக கொடுத்தும் திருமணச் செலவு ரூ.14,00,000/-ஐ வாதியின் பெற்றோரே ஏற்றுக் கொண்டு திருமணம் செய்து வைத்ததாகவும், திருமணமான 10-வது நாளிலிருந்து 1, 2 எதிரிகள் இருவரும் மற்றும் இறந்து போன 3-ம் எதிரியின் தகப்பனாரும், வாதியிடம் அவரது தகப்பனாரிடமிருந்து அவர் தர வேண்டிய மேலும் 25 பவுன் நகையும், பணம் ரூபாய் 6 லட்சத்தையும் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லுமாறு வற்புறுத்தி தொந்தரவு செய்தும், பின்னிட்டு 2 நாட்கள் கழித்து 1, 2

எதிரிகள் இருவரும் மற்றும் இறந்து போன 3-ம் எதிரியின் தகப்பனாரும், உன் அப்பா இப்பவே பணமும், நகையும் கொடுக்கலையினா நீ திரும்பி உன் அப்பா வீட்டிற்கு போய் வாழா வெட்டியா இரு என்று திட்டி மனதளவில் கொடுமைப்படுத்தி வந்துள்ளீர்கள் என்றும், மேலும் வாதியின் பெயரில் அவரது பெற்றோர் எழுதி வைத்த வீட்டை 1-ம் எதிரி அவரது பெயருக்கு எழுதி வைக்கச் சொல்லி, குடித்து விட்டு வந்து வாதியை அடித்து துன்புறுத்தி, 1, 2 எதிரிகள் மற்றும் இறந்து போன 3-ம் எதிரியும் வாதிக்கு சரிவர உணவு கொடுக்காமலும், அவரது செல்போனை பிடுங்கி வைத்துக் கொண்டு துன்புறத்தி வந்துள்ளதாகவும், 1, 2 எதிரிகள், இறந்து போன 3-ம் எதிரியாகிய 1-ம் எதிரியின் தகப்பனாரின் தூண்டுதலின் பேரில் வாதியை அடித்து தகாத வார்த்தைகளால் திட்டி கொடுமைப்படுத்தி வந்துள்ளீர் என்றும், மேலும் 1-ம் எதிரி அவர் ஏற்கனவே காதலித்த பெண்ணிடம் செல்போனில் பேசியதை கேட்ட வாதியை 1-ம் எதிரி அதையெல்லாம் நீ கேட்கக் கூடாது என்று திட்டியுள்ளதாலும், இந்நிலையில் கருவுற்ற வாதியை 1, 2 மற்றும் இறந்து போன 3-ம் எதிரி ஆகியோர் தாங்கள் கேட்ட நகையும், பணமும் வாங்கிட்டு வரலேன்னா உன்னையும், குழந்தையையும் கொன்று விடுவோம் என்று மிரட்டி அடித்து, துன்புறுத்தி 1, 2 எதிரிகள் இருவரும் வாதியை மனதளவிலும் உடலளவிலும் வரதட்சனை கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக 1, 2 எதிரிகளாகிய உங்கள் இருவர் மீதும் இ.த.ச. பிரிவு 498(அ)-ன் கீழும், மேலும், 12.04.2015 அன்று 1-ம் எதிரி மது அருந்தி விட்டு வாதியின் தந்தை வீட்டிற்கு வந்து வரதட்சனை கொடுக்க வக்கில்லாத உனக்கு எல்லாம் குழந்தை எதுக்கு என்று கூறி வாதியின் வயிற்றில் எட்டி உதைத்து, வாதி கீழே விழுந்ததில், வாதியின் கரு கலைய காரணமாக இருந்த குற்றத்திற்காகவும், மேலும் மேலும் 1-ம் எதிரி 30.09.2015-ம் தேதி இரவு 10.00 மணியளவில் வாதியின் பெற்றோர் வீட்டிற்கு வந்த 1-ம் எதிரி, நீயும் உன் அப்பாவும் பணம் நகை கொடுக்கலையின்னா தான் வேறு கல்யாணம் பண்ணனும், நீ விவாகரத்து கொடு என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், அப்போது சமாதானம் செய்து வைத்த வாதியின் தகப்பனாரை எதிரி கீழே தள்ளியும் தடுக்கச் சென்ற வாதியின் தலை முடியை பிடித்து கீழே இழுத்துப் போட்டு அடித்து உதைத்துக் கொண்டே விவாகரத்து கொடுக்கலையினா உன்னை கொலை செய்யவும் தயங்க மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ள குற்றத்திற்காகவும் 1-ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 315, 506 (ii) ஆகிய பிரிவுகளின் காருண்யா நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது கோயமுத்தூர், கூடுதல் மகிளா குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மு.நி.ப.வ.எண்.01/2018-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 1, 2 எதிரிகள் முன்னிலையானவுடன் 1, 2 எதிரிகளுக்கு இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, இவ்வழக்கானது மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கு என்பதால், கோயம்புத்தூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு

அனுப்பபப்பட்டு, அ.வ.எண்.124/2018-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பில் ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் 1, 2 எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, முதல் எதிரி எதிரி மீது இ.த.ச. பிரிவு 498(A), 315, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழும், 2-வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 498(A)-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து 1, 2 எதிரிகளுக்கு எடுத்துக் கூறி வினவிய போது, 1, 2 எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள்.

4. இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் சாட்சிகள் பட்டியலில் 11 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு, அவர்களில் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையில் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்றுப் பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறிய வரும் அரசு தரப்பு வழக்கானது.**

5. அ.சா.1 ஜூலியட் தன்னுடைய சாட்சியத்தில், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், 10.11.2015-ல் தனக்கும், முதல் எதிரிக்கும் கோவைப்புதூர், சி.எஸ்.ஐ. சர்ச்சில் நடைபெற்றதாகவும், 2-வதாக நிற்பவர் முதல் எதிரியின் தாயார் என்றும், தனக்கு திருமணத்தின் போது 68 பவுன் நகையும், 4 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்ததாகவும், திருமணத்திற்கான செலவுகளை தாங்களே செய்ததாகவும், திருமணத்தின் போது முதல் எதிரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் டாக்டராக வேலை பார்த்ததாகவும், திருமணம் முடிந்து பேட்டைவாய்தலையில் அனைவரும் ஒன்றாக குடியிருந்ததாகவும், அவ்வாறு தாங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் பணம், நகை கேட்டு துன்புறத்தவில்லை என்றும், தங்களுக்குள் சின்ன சின்ன தகராறு வரும் என்றும், காண்ப்பிக்கப்படும் புகாரில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும், கையெழுத்து மட்டும் தான் போட்டுக் கொடுத்ததாகவும், அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.1 என்றும், திருமணம் முடிந்து 3 மாதத்திலேயே தங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும், தான் அப்போது கர்ப்பமாக இருந்ததாகவும், தனக்கு சங்கீதா சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனையில் தன் கரு கலைந்ததற்காக தான் சிகிச்சை பெற்றதாகவும், அது தானாகவே தான் கலைந்தது, தன்னை யாரும் அடித்ததினால் ஏற்படவில்லை என்றும், தான் பேட்டைவாய்தலையிலேயே ஒரு புகார் கொடுத்திருந்தேன், அதை பேசி அனுப்பி விட்டார்கள் என்றும், 1, 2 எதிரிகள்

தன்னை அடித்து, உதைத்து துன்புறுத்தவில்லை என்றும், வரதட்சனை கேட்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. அ.சா.2 கனகராஜ் தான் கோவைபுதூர், உறவுசிங் யூனிட்டில் குடியிருந்ததாகவும், மனைவி பெயர் ஜாய்ஸ்ராணி என்றும், உயிருடன் இல்லை என்றும், அ,சா.1 தன் மகள் என்றும், 10.11.2015 அன்று தன் மகளுக்கும், முதல் எதிரிக்கும் கோவைபுதூரில் சி.எஸ்.ஐ. சர்ச்சில் வைத்து திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது எதிரிகள் இவ்வளவு பணம், நகை வேண்டும் என்று கேட்கவில்லை என்றும், திருமணம் முடிந்த பிறகு ஈரோட்டில் அவரது பெற்றோர் வீட்டில் குடியிருந்தார்கள் என்றும், திருமணம் முடிந்த பிறகு தன் மகளை யாரும் துன்புறுத்தவில்லை என்றும், தன் மகளுக்கு கர்ப்பம் கலைந்ததற்கு யாரும் காரணம் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. அ.சா.3 ஜெயதேவி தனது சாட்சியத்தில், தான் மேற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, 31.01.2019 அன்று பணி ஓய்வு பெற்று, தற்போது சிங்காநல்லூரில் வசிப்பதாகவும், தான் கடந்த 13.10.2015 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையம், மேற்கில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது, குனியமுத்தூர் காவல் நிலையத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற குற்ற எண்.627/2015 ச/பி 498(அ), 506(2) இ.த.ச.-ன் கீழான வழக்கை தான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வாதி ஜூலியட், வயது-26 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வழக்குக் கோப்பை வைத்ததாகவிம் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.4 சிவசங்கரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சிறப்பு நுண்ணறிவு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு டி.4 குனியமுத்தூர் காவல் நிலையததில் தலைமை காவலராக 10.10.2015 அன்று 12.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது ஜூலியட் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண். 627/2015 ச/பி 498(அ), 506(1) இ.த.ச. பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், வாதி கொடுத்த புகார் அ.த.சா.ஆ.2 என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 என்றும், முதல் தகவல் அறிக்கையையும், புகாரின் அசலையும் நீதிமன்றத்திற்கும், நகல்களை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.5 சந்திரிகா தனது சாட்சியத்தில், தான் குனியமுத்தூர், சங்கீதா மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருவதாகவும், தான் 08.04.2015-ல் ஜூலியட், க/பெ.ராஜேஷ் என்ற 26

வயது பெண் தங்கள் மருத்துவமனையில் 4 மாதம் கர்ப்பமாக இருக்கும் நிலையில் இரத்தப் போக்கு போவதாக சொல்லி தங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு உரிய பரிசோதனைகள், இரத்தப் பரிசோதனை மற்றும் ஸ்கேன் பரிசோதனை செய்து பார்த்ததில் அவரது குழந்தை வயிற்றில் இறந்திருப்பது தெரிய வந்ததால், அவருக்கு கருக்கலைப்பு செய்யப்பட்டதாகவும், அவர் தங்கள் மருத்துவமனையில் 08.04.2015-ல் அனுமதிக்கப்பட்டு, 10.04.2015-ல் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும், அவருக்கு வழங்கப்பட்ட கேஸ் சீட் நகல் அ.த.சா.ஆ.4 என்று சாட்சியமளித்துள்ளார்.

**10.** அ.சா.6 வீரம்மாள் தனது சாட்சியத்தில், தான் தற்போது கோவை மாநகர காவல் கட்டுப்பாட்டு அறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு கோவை மாவட்டம், மேற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்த போது, குனியமுத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குனியமுத்தூர் காவல் நிலையக் குற்ற எண்.627/2015 பிரிவு 498(எ), 506(2) இ.த.ச. பிரிவின் கீழான வழக்கை முதற்கட்ட விசாரணை செய்து தன் பார்வைக்கு வைத்ததை தான் 14.10.2015 அன்று மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜுலியட், கனகராஜ், ஸ்டாலின், லதா ஆகியோரையும், 17.10.2015 அன்று சாட்சிகள் சந்திரன், ஷீலா, பிரேமா, சுகந்தி ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் பாதிக்கப்பட்ட வாதி ஜுலியட்டிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சந்திரிகா என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, சான்று பெற்றதாகவும், வழக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் சிவசங்கரன் மற்றும் முதற்கட்ட விசாரணை செய்த உதவி ஆய்வாளர் ஜெயதேவி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரிகள் மூவரும் முன் ஜாமீன் பெற்றதால் வழக்கின் விசாரணையை முடித்து, எதிரிகள் மீது 05.05.2017 அன்று சட்டப் பிரிவை 498(எ), 506(2)-ல் இருந்து 498(எ), 313 மற்றும் 506(2) இ.த.ச. பிரிவுகளின் கீழ் சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.5 என்று சாட்சியமளித்துள்ளார்.

**11.** இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

**12.** இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் 1,2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி 1, 2 எதிரிகளுக்கு எடுத்துக் கூறி கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்ட போது, 1, 2 எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் என மறுத்து, தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறினார்கள் . எனவே, 1, 2 எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

<u>பிரச்சனை :</u>

**13.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், முதல் எதிரி மீது இ.த.ச. பிரிவு 498(A), 315, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழும், 2-வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 498(A)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எந்தவொரு தகுநிலை ஐயப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

***<u>தீர்வு -</u>***

**14**. இந்த வழக்கானது புகார்தாரரான வாதி முதல் எதிரியின் மனைவி என்றும், 2, 3 எதிரிகள் முதல் எதிரியின் பெற்றோர் என்றும், தனக்கும், முதல் எதிரிக்கும் 10.11.2014-ம் தேதி பெரியோர்கள் பார்த்து நிச்சம் செய்து, திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்தின் போது, மேலும் நகை, பணம் கேட்டு தன்னை 1 முதல் 3 எதிரிகள் கொடுமைப்படுத்தி, தனது பெற்றோர் தன் பெயரில் எழுதி வைத்த வீட்டை முதல் எதிரி தன் பெயரில் மாற்றி எழுதி வைக்கச் சொல்லி, வாதிக்கு சரிவர உணவு கொடுக்காமல் பல வகைகளில் 2, 3 எதிரிகள் தூண்டியதன் பேரில், முதல் எதிரி தகாத வார்த்தைகளால் பேசியும், அடித்தும், துன்புறுத்தியதாகவும், கருவுற்ற வாதியை 1 முதல் 3 எதிரிகள் நகை, பணம் கேட்டு அதை வாங்கி வரவில்லையென்றால் உன்னையும், குழந்தையையும் கொன்று விடுவோம் என்று மிரட்டி, மனதளவிலும், உடலளவிலும் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாகவும், 12.04.2015 அன்று வாதியின் வயிற்றில் முதல் எதிரி எட்டி உதைத்து வரதட்சணை கொடுக்க வக்கில்லாத உனக்கு குழந்தை எல்லாம் எதற்கு என்று சொல்லி உதைத்ததில், வாதியின் கரு கலைய முதல் எதிரி காரணமாக இருந்ததாகவும், 30.09.2015-ம் தேதி வாதியின் பெற்றோர் வீட்டிற்கு முதல் எதிரி வந்து நீயும், உன் அப்பாவும் பணமும், நகையும் கொடுக்கவில்லையென்றால் நான் வேறு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும், நீ விவாகரத்து கொடு என்று சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டி, சமாதானம் செய்ய வந்த வாதியின் தகப்பனாரை கீழே தள்ளியதாகவும், தடுக்க சென்ற வாதியின் தலைமுடியைப் பிடித்து கீழே இழுத்துப் போட்டு உதைத்து நீ விவாகரத்து கொடுக்கவில்லையென்றால் உன்னை கொலை செய்ய தயங்க மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், முதல் எதிரி மீது இ.த.ச. 498(A), 315, 506(i) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 2-வது எதிரி மீது 498(A) பிரிவின் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. 3-வது எதிரி இறந்துவிட்டபடியால், அவர் மீதான வழக்கு அற்றுப் போய் விட்டதாக கருதி முடிக்கப்பட்டது. இவ்வழக்கில், புகார்தாரரான வாதி ஜூலியட் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது, புகாரிலும், குற்றச்சாட்டிலும் உள்ள எந்த விபரங்களையும் சொல்லாமல் தனக்கும், முதல் எதிரிக்கும் 10.11.2015-ல் திருமணம் நடைபெற்று பேட்டைவாய்த்தலையில் ஒன்றாக குடியிருந்தோம் என்றும், பணம், நகை கேட்டு எதிரிகள் துன்புறுத்தவில்லை,

எங்களுக்குள் சின்னச் சின்ன தகராறுகள் வரும். புகாரிலுள்ள விபரங்கள் தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1. திருமணம் நடந்து 3 மாதங்களுக்குள் எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நான் அப்போது கர்ப்பமாக இருந்தேன். எனக்கு சங்கீதா சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் என் கரு கலைந்ததற்கான சிகிச்சை பெற்றேன். அது தானாகதான் கலைந்தது. என்னை யாரும் அடித்ததனால் ஏற்படவில்லை என்று சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.2 கனகராஜ் புகார்தாரரின் தகப்பனார் 10.11.2015-ல் முதல் எதிரிக்கும், தனது மகளுக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எதிரிகள் இவ்வளவு நகை, பணம் வேண்டுமென்று கேட்கவில்லை. என் மகளை யாரும் திருமணம் முடிந்த பிறகு துன்புறுத்தவில்லை. என் மகளுக்கு கர்ப்பம் கலைந்ததற்கு யாரும் காரணம் இல்லை என்று சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கில் புகார்தாரர் மற்றும் அவருடைய தகப்பனார் அரசு தரப்பை ஒட்டி சாட்சியமளிக்காத நிலையில், ஏனைய சாட்சிகள் அரசு தரப்பில் விலக்கப்பட்டு, வழக்கில் வழக்கு பதிவு செய்த பின்னர் வாதியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த உதவி ஆய்வாளர் அ.சா.3 ஆகவும், புகாரைப் பெற்று, வழக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் அ.சா.4 ஆகவும், வாதிக்கு கருக்கலைப்பு ஏற்பட்ட போது, சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.ய 5 ஆகவும், வழக்கில் புலன் விசாரணை செய்து, குற்ற அறிக்கை தாக்கல் செய்த ஆய்வாளர் அ.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

15. 1 முதல் 3 எதிரிகள் திருமணமானதில் இருந்து வாதியை உடலளவிலும், மனதளவிலும் பணம், நகை கேட்டு அடித்து, துன்புறுத்தி கொடுமைப்படுத்தியதாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், மேற்படி வாதியே இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது, அவ்வாறு தன்னை 1 முதல் 3 எதிரிகள் கொடுமைப்படுத்தியதாகவோ, வரதட்சனை கேட்டதாகவோ சாட்சியமளிக்கவில்லை. வாதியின் தகப்பனார் அ.சா.2-ம், 1 முதல் 3 எதிரிகள் தன் மகளை அடித்து, உதைத்து மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்தியதாகவோ, வரதட்சனை கேட்டதாகவோ சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 இருவருமே எதிரிகள் பணம், நகை கேட்கவில்லை என்றும், வாதியை துன்புறுத்தவில்லை என்றும் தங்களது சாட்சியத்தில் சொல்லியுள்ளனர். ஏனைய சாட்சிகள் வழக்கின் நடைமுறைகளுக்காக விசாரிக்கப்பட்டவர்கள்.

16. இந்நீதிமன்றத்தில், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களின் அடிப்படையில் 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதனை பரிசீலனை செய்கையில், 1, 2 எதிரிகள் தன்னிடம் பணம், நகை கேட்டு அடித்து, உதைத்து துன்புறுத்தினார்கள் என்று வாதியான

அ.சா.1-ஏ தன்னுடைய சாட்சியத்தில் சொல்லாத நிலையில், 1, 2 எதிரிகள் மீதான இ.த.ச. 498(A) பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

17. வாதியை முதல் எதிரி அடித்து, உதைத்ததனால் அவருடைய கரு கலைந்து விட்டதாகவும், அதனால் எதிரி இ.த.ச. 315 பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான சாட்சியம் வாதியால் சொல்லப்படவில்லை. வாதி தன்னுடைய சாட்சியத்தில் தன்னுடைய கரு தானாகதான் கலைந்தது என்றும், தன்னை யாரும் அடித்ததனால் ஏற்படவில்லையென்று சொல்லியுள்ள நிலையில், முதல் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 315 பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

18. வாதியும், முதல் எதிரியும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, வாதி தன் பெற்றோர் வீட்டில் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில், 30.09.2015-ம் தேதி இரவு 10.00 மணியளவில் முதல் எதிரி வாதியின் பெற்றோர் வீட்டிற்கு வந்து, தகராறு செய்து, வாதியையும், அவரது தகப்பனாரையும் பார்த்து கொலை மிரட்டல் செய்ததாக இ.த.ச. 506(i) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு முதல் எதிரி தங்கள் வீட்டிற்கு வந்து கொலை மிரட்டல் விடுத்தார் என்று வாதியான அ.சா.1 மற்றும் அவருடைய தகப்பனாரான அ.சா.2 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் சொல்லாத நிலையில், முதல் எதிரி மீதான இ.த.ச. 506(i)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

**முடிவில்,** முதல் எதிரி மீதான இ.த.ச. 498(A), 315, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டும், 2-ம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 498(A)-ன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் 1, 2 எதிரிகள் மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்வு கண்டு, முதல் எதிரி இ.த.ச. 498(A), 315, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழும், 2-ம் எதிரி இ.த.ச. பிரிவு 498(A)-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என தீர்வு கண்டு, 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது. இவ்வழக்கில் 3-வது எதிரி இறந்துவிட்டபடியால், அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப் போய் விட்டது.

19. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்.) ஜெ.ராதிகா,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மகிளா கோர்ட்,
கோயமுத்தூர்.

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| 1 | அ.சா. 1 | திருமதி.ஜுலியட். |
| 2 | அ.சா. 2 | திரு.கனகராஜ். |
| 3 | அ.சா. 3 | திருமதி.ஜெயதேவி, உதவி ஆய்வாளர். |
| 4 | அ.சா. 4 | திரு.சிவசங்கரன், தலைமைக் காவலர். |
| 5 | அ.சா. 5 | மருத்துவர்.சந்திரிகா. |
| 6 | அ.சா. 6 | திருமதி.வீரம்மாள், ஆய்வாளர். |

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> - இல்லை

<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்-</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.த.சா.ஆ.1 | 10.10.2015 | புகாரில் உள்ள அ.சா.1-ன் கையெழுத்து மட்டும். |
| 2 | அ.த.சா.ஆ.2 | 10.10.2015 | புகார். |
| 3 | அ.த.சா.ஆ.3 | 10.10.2015 | முதல் தகவல் அறிக்கை. |
| 4 | அ.த.சா.ஆ.4 | 31.12.2015 | மருத்துவ சான்று. |
| 5 | அ.த.சா.ஆ.5 | 05.05.2017 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை. |

<u>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருள்கள்</u> - இல்லை

(ஒம்.) ஜெ.ராதிகா,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மகிளா கோர்ட்,
கோயமுத்தூர்.

<u>குறிப்பு:</u>

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.